# முன்னுரை

தேனைத் தேடித் திரியும் வண்டொன்று மலரொன்றைத் தெரிந்து கொண்டால் - அதன் மணத்தால், நிறத்தால், அழகால் கவரப்பட்டு அம்மலரை நாடும். விரிவின் பொலிவில் மென்மையாய் விழங்கும் இதழ்கழைத் தாவி, உள்ளே காணும் செறிவின் தேனை உறிஞ்சிச் சுவைத்துக் குடித்து, உளம் மாந்தித் களிப்பிலாடும். அந்த வண்டினைப் போலவே வாசகன் ஒருவன் - நூலொன்றைக் கையில் எடுத்தால் - அதன் அமைப்பு, தலைப்பு, தலைப்பை விளக்கும் வர்ணக் கலவையிலான முகப்பு இதழை விரிக்கத் தூண்டும்.

இதழின் விரிப்பிலே ஆசிரியரின் முன்னுரையைத் தொட்டு, அறிஞர் பெருமக்களின் ஆய்வுரைகளைக் காணலாம். அவை நூலின் அறிமுக உரைகளாக அமையும். அவற்றின் நுகர்ச்சி வாசகனை நூலுள் நுழைத்து விடும். தேனை நாடும் கருவண்டும், நூலின் தெளிவைக் கூடும் வாசகனும் ஒப்பீட்டின் உவமையெனலாம்.

நூலின் ஆரம்ப உரைகளிலே முதன்மை இடத்தைப் பெறுவது முன்னுரையாகும். இதனை முகவுரை, என்னுரை என்றெல்லாம் நூலாசிரியர்கள் எழுதுவார்கள். இவ்வுரையே நூலுக்கு திறவுகோலாக அமையும். ஆர்வத்தால் உந்தப்படும் வாசகனை ஆசிரியர் அன்பாக வரவேற்று உள்ளே அழைத்துச் செல்வார். கருவில் உருவான நூல் வளர்ச்சிக் கட்டங்களாய், நூலாசிரியரின் எண்ணங்கள், இலக்குகள், இலட்சியங்கள் பரந்து கிடக்கும் காலத்தின் படைப்பாகக் காணப்படும். அங்கே அடியடியாய்ப் புதைந்து கிடக்கும் பொருள் படிவுகளை அகழ்ந்தெடுக்கும் கருவிகளாய் விடயத் தலைப்புகள் புதிரூட்டும். அவற்றை அவிழ்தெடுத்து வாசகர்கள் அனுபவிக்கத் தூண்டுபவர்களே நூலாசிரியர்கள். அவர்களில் நானும் ஒருவனாகி நிற்பதில் ஆனந்தமடைகிறேன்.

உலகில் வாழும் உயிரனைத்தும் அவற்றிடம் உண்டாகும் உணர்வுகளுக்கேற்ப நாளாந்த வாழ்கையை நகர்த்துகின்றன. அந்த உணர்வுகளை அறிவின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தி, சமூக நீதி நியாய மனிதாபிமான கட்டுக்கோப்புக்குள் வலுப்படுத்தி, அன்பு பண்பு ஆன்மிக நெறிகளுக்குட்படுத்தி, வாழ்வுப் பயணத்தைச் செவ்வைப் படுத்தும் ஆற்றல் மனிதனிடத்தில் மட்டுமே உண்டு. அத்தகைய உணர்வுகள் எண்ணங்களாகத் தோன்றி, சிந்தனைகளாக மாற்றம் பெறும்போது அவை அழியாது, குலையாது, அமைப்புச் சிதையாது வடிவமைப்பைத் தருவது எழுத்தேயாகும். எழுத்துக்கள் மூலம் அவை பதியப்பட்டு, பல்லாண்டு காலம் பாதுகாக்கப்பட உதவுவன நூல்களே எனலாம்.

ஆரம்ப காலத்தில் இதிகாசம், புராணம், இலக்கியங்கள் அனைத்தும் ஏட்டுருவிலே எழுத்தாணி கொண்டே எழுதப்பட்டன. விஞ்ஞான வளர்ச்சியினால் அவை அச்சுவாகனமேற்றப்பட்டு நூல்களாகின. சங்ககாலப் படைப்புகளெல்லாம் பெரும்பாலும் பாட்டுவடிவிலே தோற்றம் பெற்றன. நூல்களைக் காலத்தின் கண்ணாடி என்பார்கள். நூல்கள் அவை எழுந்த கால மக்களின் வாழ்க்கைமுறை, வாழ்வு வகை, ஆட்சி அதிகார நிலைகளைப் பிற்கால மக்கள் அறிந்துகொள்ளப் பெருந்துணையாகின. இக்காலத்தில் தோன்றும் இலக்கியங்கள் எதிர்கால மக்கள் - பல நூற்றாண்டு காலம் சென்றால் கூட – அறிந்து,

புரிந்து, உணர்ந்து கொள்ள உதவும். காலத்தின் கண்ணாடியில் அக்கால விம்பம் தெளிவாகத் தெரிய, கண்ணாடியின் பின்புறத்தில் பூசப்படும் இரசமாகக் காணப்படுபவர்களே நூலாசிரியர்கள். அந்த வகையிலேயே இன்றைய நூலாசிரியர்கள் தங்களது ஆக்கங்களைப் படைக்கின்றனர். அவர்களுடன் நானும் இணைந்து கொள்வதில் பெருமையடைகின்றேன்.

பிள்ளையில்லா திருந்து என்னைப் பெற்றவர்கள், பாசத்தைக் கூண்டாக்கிப் பாதுகாத்தனர். நான் பள்ளி செல்லும் காலத்தைக்கூட தள்ளிப்போட்டனர். இதிகாச புராண இலக்கியக் கதைகளில் பெருமீடுபாடு கொண்ட எனது தாயார், என்னைப் பக்கத்திலே இருத்திப் பாடல் வடிவிலே இருந்தாலும், உரை வடிவிலே இருந்தாலும் அக்கதைகளைக் கிராமியப் பண்ணிலே பாடுவார்; எனக்கும் பாடப் பயிற்சி தருவார். இந்தவகையில் இசை வடிவங்களாலும், பாடல் பதிவுகளாலும் கிராமியக் கலை, ஈடுபாட்டாளனாக மாறினேன்.

மட்டக்களப்புக் கல்லூரிகளில் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடந்த காலத்திலேயே நானும் அங்கு கல்வி கற்றேன் (1949-1956). அந்த காலகட்டத்தில் தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அறிஞர் அண்ணாவினதும் அவரது தம்பிமாரினதும் ஏராளமான வெளியீடுகள் மட்டுநகர் நூல் நிலையங்களில் காணப்பட்டன. புரட்சியும், எழுச்சியும், புதுமையுமான அவர்களது சிந்தனைப் பிரவாகத்தில் நான் அள்ளுண்டு போனேன்; வளமாளும் வாசகனாகிவிட்டேன். கவிதை நூல்களைப் படிப்பதிலே ஆர்வம் மேலோங்கி நின்றது. பாரதியார் பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள் அதனை வேகப்படுத்தின. அடிமை வாழ்வு பிணவாழ்வு, ஆளும் வாழ்வே உயிர் வாழ்வு அதுவே உரிமை வாழ்வு என்பதனை உணர்த்தியதோடு, என்னை உரிமைக்குரல் கொடுக்கும் ஒருவனாக மாற்றின.

பழமை குலையாததும், பண்டைய பெருமைகளால் தலையானதும் சித்தர்களின் அருள் நிலையானதுமான சித்தாண்டிக் கிராமத்தில் பிறந்து வளர்ந்த என்னைக் கிராமியக் கலைகள் மேடைப் பேச்சாளனாக, நாடக ஆசிரியனாக மாற்றியது. இதனால் சினிமா பார்ப்பதில் நாட்டமேற்பட்டது. அதன் மூலம் கவிஞர் கண்ணதாசனின் பாடல்கள் உள்ளத்தை கொள்ளை கொண்டன. அமிர்தநதிக் கவிஞனின் வழிகாட்டல் அத்திவாரமிட்டது. தாங்குங் காலத்தடத்தில்தான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் (1962), பழகும் உயர் நண்பனாகக் கவிஞர் பாண்டியூரன் வந்து வாய்த்தார்.

கலாசாலையில் வெளியாகும் கலைச்செல்விச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டபோது – கவிதையே எழுதியிராத என்னை ‘‘கவிதையொன்று எழுது’’ என்று வற்புறுத்தினார். நான் தயங்கியதை அவதானித்த பாண்டியூரன், ‘‘நீ எழுதுவாய், எழுதடா மச்சான்’’ என்று உற்சாகமூட்டினார். ‘‘கக்கம் குடமிருத்தி…...’’ எனும் அடியும் எடுத்துத் தந்தார். ‘‘திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்’’ என முருகன் கச்சியப்பருக்கு அடியெடுத்து கொடுத்தது போல, ‘‘உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்’’ என்று சிவனார் சேக்கிழாருக்கு அடியெடுத்து கொடுத்தது போல, கவிஞர் பாண்டியூரன் எடுத்துத் தந்த அடியின் தூண்டுதலின் தூக்கிலே நான் எழுதத் துணிந்ததால் பிறந்ததே – பகுதி (5) இல், (6) ஆவதாகக்

காணப்படும் ‘‘வேதனைக்குள் ஆக்கிவிட்டாள்’’. அந்த முதல் பிரசவம் ஒரு சுகப்பிரசவமானதால், கவிதைப் பிரசவங்கள் சுலபமாகிப்போயின.

எனது முதல் கவியரங்கிலே தலைமை தாங்கிய காலஞ்சென்ற மட்டக்களப்புத் தமிழகக் கந்தையா பண்டிதர் அவர்கள்,

‘‘தவநாயகக் கவிஞன்
தான் செய் தமிழ்க் கவிதை
அமிழ்தாயிருக்கும்
அழைத்தோம் அவன் வருக’’

என என்னை மேடைக்கு அழைத்தார். மட்டக்களப்பின் மாண்பின் அறிஞர், கந்தையா பண்டிதர் அவர்களின் எனக்கான முதல் அழைப்பு, மாவட்டத்தின் பல்வேறு கவியரங்குகளுக்கான அழைப்பாக மாறியது. இதனைத் தொடர்ந்து ஈழத்தில் முன்னணி வகித்த சுதந்திரன், வீரகேசரி, தினபதி பத்திகைகளிலும், சஞ்சிகைகள், நினைவு மலர்களிலும் - பொன்-தவம், தாயகதாசன், பூபாரதன் ஆகிய புனைபெயர்களில் கவிதைகள் பிரசுரமாகின. இலக்கிய சமய விழாக்களில் இசையமைப்புப் பாடல்கள் - பொன்-தவநாயகம் என்னும் சொந்தப் பெயரில் விளம்பரப்படவும் வாய்ப்புகள் ஏற்பட்டன. அத்துடன் கல்லூரிகள், வித்தியாலயங்கள், கழகங்கள், மன்றங்கள் வெளியிடும் சஞ்சிகைகளுக்கும், விழாக்களில் அரங்றேும் நூல்களுக்கும் ஆய்வுரைகள் வழங்கியதால் பாராட்டுப் பெற்றுள்ளதோடு, ஆலயங்களில் உற்சவகால சொற்பொழிவுகளின் போதும், கலைஞர்கள் கவிஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளின் போதும் பொன்னாடை போர்த்தி, பரிசுகள் நினைவுச் சின்னங்கள் தரப்பட்டு நான் மதிப்பளிக்கப்பட்டுள்ளேன்.

கடந்த காலங்களில் நடந்த இரண்டு மதிப்பளிப்புக்கள் மறக்கமுடியாதவை. அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்துச் தமிழ்ச் சங்கம் நடத்திய முத்தமிழ் விழாவின் உலகளாவிய ரீதியிலான கவிதைப் போட்டியில் சான்றிதழும் பணப்பரிசும் பெற்றமை. பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் (தற்போதைய ஊவா மாகாணசபை உறுப்பினர்) திருவாளர் வேலாயுதம் அவர்கள் பசறை ம.ம.வித்தியாலயத்தில் நடத்திய பொங்கல் விழாவில் சிறப்புச் சொற்பொழிவாளனாகக் கலந்து கௌரவம் பெற்றமை. இத்தகைய பாராட்டுகளுக்கு ஈடாக எமது தேனாடு – பழகுதமிழ் பாவலர், நகச்சுவை நாவலர், தத்துவக் கவிஞர் என்னும் பட்டங்களைத் தந்து பெரிதுவக்கச் செய்தது.

பாவென்றால் பைந்தமிழின் சுவையைத் தேடுவேன். அந்தச்சுவை தத்துவமாக அமையும்போது பரவசமடைவேன். மனித வாழ்வே ஒரு தத்துவந்தான். அதில் மனங் கொள்ளும் அத்தனை அம்சங்களும் தத்துவந்தான். கவிஞர் கண்ணதாசனின் பாடல்களில் பொதிந்துள்ள தத்துவங்கள் அத்தனையும் புதுமையானவை, பொலிவானவை, பொருள் பொதிந்தவை. அவற்றுள் புதைந்து போனதால், என்னை அறியாமலே எனது பேச்சிலும் எழுத்திலும் தத்துவங்கள் புகுந்துகொண்டன. என்னோடு உரையாடும் நண்பர்கள் அவற்றை மனங்கொண்டு மகிழ்வார்கள். எனவேதான் எனக்களித்த பாராட்டுப் பட்டங்களில் ‘‘தத்துவக் கவிஞர்’’ என்பதை என் பெயரோடு சேர்த்துக்கொண்டேன்.

1962 இல் பிரசவிக்கப்பட்ட கவிதைச் சிசுக்கள் வளர்ச்சிப்படிமுறையில் - குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், குமரப் பருவத்தையும் கடந்த நிலையில், ‘‘இன்பத் தமிழும் இனிய நிலமும்’’ என்னும் திருமணத் திருமுகத்தால் மணமேடையில் அமருகின்றன. காலம் பிந்திய கலியாணந்தான்; என்றாலும் கருத்தொருமித்த கைப்பிடித்தலாகும். ஆன்மீகப் பெரியார் ஆசிகூற, அறிஞர் பெருமக்கள் அணியாய் நின்று வாழ்த்த, அழகுத் தாலியாய் வெளியீடு அமைகிறது. குவிந்த இதழ்கள் விரியக் குளிர்நகையும் பரவுகிறது. பெற்றெடுத்த என் முகத்தில் பெருமை தவழ்கிறது. பாசப் பிணைப்பின் ஊற்று கண்களிலே பரவித் துளிர்க்கிறது. பூரிப்பால் விம்மும் நெஞ்சம் புளகாங்கிதமடைகின்றது.

மட்டக்களப்பில் இடம்பெறும் நூல் வெளியீட்டு விழாக்களுக்குப் பங்காளனாகவும், சில நூல்களின் (சிறுகதை, கவிதை) ஆய்வாளனாகவும் அழைக்கப்படுவேன். அவ்வேளைகளில் சந்திக்கும் அன்பர்கள், நண்பர்கள், அறிமுகமானவர்கள், ‘‘எப்போதப்பா உனது கவிதை நூலை வெளியிடுகிறாய்?’’ என்று கேட்பார்கள். காலம் கனியட்டும் என்றிருந்த நான், நூல் வெளியீட்டுக்கான காலம் கனிந்து விட்டதாகவே உணர்ந்தேன். எனது துணைவி ‘‘திலகம்’’ மங்கையர்கரசியாரினதும், பிள்ளைகளினதும் ஆதரவும், ஆலோசனைகளும், தொடரான தூண்டுதலும், மட்டுநகரைச் சேர்ந்த ‘‘இவள்’’ என்னும் புனைப்பெயரில் கவிதையெழுதும் இவான்ஜலினது உருக்கமான வேண்டுகோள்களும், உணர்வுபூர்வமான ஊக்கப்படுத்தலும் நூல் ஆக்கத்திற்கு என்னை ஆயத்தப்படுத்தின. எழுதப்பட்டிருந்த கவிதைகளில் தெரிவு செய்யப்பட்டவற்றை வகுத்தும் தொகுத்தும் நூலுக்கு வடிவங் கூட்டி, ‘‘இன்பத் தமிழும் இனிய நிலமும்’’ என்னும் பெயரும் சூட்டினேன். அட்டைப்படம் வரையும் பணியை பிள்ளைகளிடம் ஒப்படைத்தேன். நூலை அச்சிடும் பொறுப்பைச் சென்னை மணிமேகலை பிரசுரத்தார் ஏற்றுக்கொண்டனர்.

குழந்தையொன்று பிறந்து முப்பதாம் நாள், அக்குழந்தையின் முடியகற்றி, பெண்பிள்ளையானால் காதுகுத்தி, அணிகள் பூட்டி, அழகான உடை அணிவித்து, குழந்தையைத் தொட்டிலிட்டு பெற்றார் பெரிதுவந்து மகிழ்வார்கள். உற்றார், நண்பர், உறவினர்கள் அழைக்கப்பட்டு விருந்தாடும் விழா நடாத்தப்படும். இதனைக் கிராமங்களில் ‘‘மருங்கை’’ என்பார்கள், பண்டைய காலத்துப் பண்பாட்டு விழா அது. அங்கு கலந்து கொண்டோர் குழந்தையை வாழ்த்திப் பரிசுகள் வழங்குவார்கள். குழந்தைப் பிறப்புக்கு உதவிய மருத்துவரும் தாதிமாரும் நினைவு கூரப்படுவார்கள்.

நூல் வெளியீடும் ஒருவகையில் மருங்கைதான். கவிதைகளின் படியெடுப்புக் குறையென்னும் முடியகற்றி, பிரசுரத்துக் காதுகுத்தி, உவக்கும் உரைகளணி பூட்டி, நயத்தலுடை அணிவித்து, விழாமேடைத் தொட்டிலிட்டு, வெளியீட்டு வாழ்த்துாடே விழாமக்கள் களிப்படைவர். இந்த வகையில் ‘‘இன்பத் தமிழும் இனிய நிலமும்’’ உங்களுடன் உறவாடுகிறது. இதன் மூலம் உங்களை என்னுடன் நெருக்கமாக்கி, நான் பெற்ற இன்பம் நீங்களும் பெற்றுவிடத் தூண்டி, உற்சாகப் படுத்தியது. இந்நிலைக்கு

உறுதுணையானவர்களைப் பாராட்டி, வாழ்த்தி, நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எந்நன்றியையும்விடச் செய்ந்நன்றி சிறந்ததல்லவா!

பெற்றோர் பிள்ளைகளை மதிக்க வேண்டும்; பிள்ளைகள் பெற்றோரை மதிக்க வேண்டும். எனது பிள்ளைகள் ''இன்பத் தமிழும் இனிய நிலமும்'' நூலை வெளியிட மேற்கொண்ட நடவடிக்கைகளை எண்ணிப்பார்க்கின்றேன். வள்ளுவன் வாய்மொழியில் ''என்நோற்றான்'' என்று பெருமைப் படுகின்றேன். அவர்களுக்கு என் தந்தை நன்றியைக் கூறுவதோடு, எனது துணைவியாருக்கும் குறிப்பாக ''இவள்'' இவான்ஜலினின் முயற்சிகளை எண்ணிப்பார்த்து, அப்பிள்ளைக்கும் இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன். எனது கவிதை வாழ்வுக்கு ஈர்ப்புச் சக்தியாகி, நெஞ்சில் நிலையான அமரர் கவிஞர் பாண்டியூரனுக்கான நன்றிகள் அவருக்கான நினைவாஞ்சலியாகின்றது. இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய இராமகிருஷ்ண சங்கத்தின் வணக்கத்திற்குரிய சுவாமி அஜராத்மானந்தா மகராஜ், அருளுரை வழங்கிய இந்தியா இமயம் ரிஷிகேஷ் சுவாமி நித்தியானந்தா் அவர்களுடன் வாழ்த்துரை, பாராட்டுரை, சிறப்புரை, கணிப்புரை, மதிப்புரை, அணிந்துரைகளை உவந்தளித்த அறிஞர் பெருமக்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். இறுதியாக - இந்நூலை அச்சுப் பதிப்பாக்க முழுவிருப்புடன் முன்வந்து, உள்ளே உயிர்ப்புக்களை உவப்பாக்கி, உள்ளங் கொள்ளை கொள்ளும் நூலாக்கி எமக்களித்த சென்னை மணிமேகலைப் பதிப்பகத்தாருக்கு எமது மனமார்ந்த நன்றியைக் கூறிப் பணியின் நிறைவுக்கு வருகின்றேன்.

அன்பின்
தத்துவக் கவிஞர்

